# கொழும்பு-யாழ் பயணிகள் கப்பல் சேவை நடைபெறாது

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு பயணிகள் செல்ல கப்பல்சேவை ஒன்று ஆரம்பிக்க எடுத்த முயற்சிகள் கைகூடவில்லையென கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. தரைமார்க்கமாக பயணிகள் செல்லில் ஏற்படும் கஷ்ட நிலைமை குறித்து கடந்த ஏப்ரல் மாதம் செயலகத்தில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட பொழுது இக்கப்பல் சேவை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. பாதுகாப்பு நிலைமை காரணமாக பயணிகளை ஏற்றிச் செல்ல கப்பல் கம்பனி விரும்பவில்லையெனவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. தற்போது பருத்தித்துறைக்கு வந்து செல்லும் கப்பல்களில் அனுப்பப்படும் சுகம் நோயாளிகளின் தொகையும் குறைக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் 40 சுகம் நோயாளிகள் அனுப்பப்பட்டு வந்தனர் ஆனால் தற்போது இத்தொகை குறைக்கப்பட்டு முப்பது பேர் செல்கிறார்கள் — 04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு    விலை ரூபா:- 4 - 50

முரசொலி

முரசு 05   ஒலி 180   பிரசோற்பத்தி   வைகாசி 13   (27-05-1991)   திங்கள்

★ தமிழ்நாட்டில் தங்கியுள்ள

# தமிழ் அகதிகள் பலவந்தமாக வெளியேற்றப்படுவார்கள்!

## வாழப்பாடி மீண்டும் சொல்கிறார்

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாமாகவே முன்வந்து தமிழகத்தை விட்டு வெளியேற வேண்டும் அல்லது அவர்கள் தமிழக மக்களாலேயே பலவந்தமாக வெளியேற்றப்படுவார்கள் என தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் தமிழகத்தில் தங்கியிருப்பதை தமிழக மக்கள் விரும்பவில்லை என காங்கிரஸ் பிரமுகர் ஜெயந்தி நடராஜனும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அகதிகளை வெளியேற்றுவது குறித்து தமிழக காங்கிரஸ் தொண்டர்களே தீவிரமாக இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த அகதிகளை வெளியேறுமாறு முன்னரும் ஒரு தடவை செல்வி ஜெயலலிதாவும் வாழப்பாடி ராமமூர்த்தியும் வலியுறுத்தியிருந்தமை தெரிந்ததே.

## தமிழக காங்கிரஸ் கமிட்டி

# சோனியா தவிர்ந்த வேறு எவரும் தலைமையை ஏற்க முடியாது!

திருமதி சோனியா காந்தியே காங்கிரஸ் கட்சியின் தலைமைப்பதவியை ஏற்க வேண்டுமென தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கேட்டுள்ளது.

வாழப்பாடி ராமமூர்த்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சோனியா தவிர்ந்த வேறு எவரும் தலைமைதாங்குவதை ஏற்கமுடியாது எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

## இந்திரா காங்கிரஸின் தலைவராக

# நரசிம்மராவை நியமிக்குமாறு வங்காள காங்கிரஸ் வலியுறுத்து

காங்கிரஸின் தலைமையை பி. வி. நரசிம்மராவ் ஏற்குமாறு சில மாநில காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக்கள் இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைமைப்பீடத்தை கேட்டுள்ளன.

மேற்கு வங்காள காங்கிரஸ் கமிட்டி காங்கிரஸ் தலைமைப் பீடத்துக்கு அனுப்பியுள்ள தந்தி ஒன்றில் நரசிம்மராவை நியமிக்குமாறு வலியுறுத்தியுள்ளது.

சோனியாவை வற்புறுத்தாது அவரது முடிவுக்கு மதிப்பளிக்க வேண்டும் எனவும் அது தலைமைப் பீடத்தைக் கேட்டுள்ளது.

## அதிபர்கள் சேவை தரம்

# போட்டிப்பரீட்சைகள் அடுத்தமாதம் ஆரம்பமாகும்

இலங்கை அதிபர்கள்சேவை தரம் மூன்றிற்கு அதிபர்களைத் தெரிந்தெடுப்பதற்கானபோட்டிப் பரீட்சை எதிர் வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி சனிக்கிழமையும் முதலாம், இரண்டாம் தரங்களுக்கான போட்டிப் பரீட்சை ஜூன் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படவுள்ள இப்போட்டிப் பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளின் முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (12)

# ராஜீவ் காந்தியின் அஸ்தி திரிவேணி சங்கமத்தில் கலக்கப்படும்

ராஜீவ் காந்தியின் அஸ்தி நாளை கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகள் கலக்கும் திரிவேணி சங்கமத்தில் கலக்கப்படவுள்ளது.

நேற்று மகன் ராகுல் காந்தி சக்திஸ்தலவில் இருந்து ராஜிவின் அஸ்தியை முப்பதுக்கும் மேற்பட்ட செப்புக்கலசங்களில் — 04 ஆம் பக்கம் பார்க்க

## க. பொ. த. உயர்தரப் பரீட்சை

# கணக்கியல் பாடத்திற்குரிய விடைத்தாள் வழங்கப்படவில்லை

யாழ் புனிதபத்திரிசியார்கல்லூரி பரீட்சை மண்டபத்தில் க. பொ. த. உயர்தரவிசேட பரீட்சையில் கணக்கியலுக்கு தோற்றிய மாணவர்களுக்கு சரியான விடைத்தாள்கள் வழங்கப்படவில்லையென அம் மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

கணக்கியல் பாடவிடைத்தாள்களில் பேரேட்டுக்குரிய (லெஜர்) விடைத்தாள்களை பரீட்சார்த்திகள் கேட்டபோது சாதாரண விடைத்தாள் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேபோல நாட்குறிப்பேட்டிற்குரிய (ஜேர்ணல்) —04 ஆம் பக்கம் பார்க்க

# ஆனையிறவு முகாம் பகுதியில் ஆறு மணி நேர குண்டு வீச்சு

ஆனையிறவு இராணுவ முகாமைச் சுற்றிய பகுதிகளில் நேற்றும் விமானத்தாக்குதல்கள் நடைபெற்றன.

நேற்று முன்தினம் காலை 9 மணிமுதல் மாலை மூன்று மணிவரை நடைபெற்ற வான் தாக்குதலில் மூன்று ஹெலிகப்டர்கள், இருபொம்மர்கள், வை-12 ரக விமானம் என்பன பங்குபற்றியுள்ளன.

ஆறு மணி நேரம் வரையில் நடைபெற்ற இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

# சுற்றுநிருபங்கள், கடிதங்கள் சிங்களத்தில் அனுப்பப்படுகின்றன

யாழ் மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் என்பனவற்றிற்கு தொடர்ந்தும் சிங்கள மொழியில் கடிதங்களும், சுற்றுநிருபங்களும் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேபோல அரச அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் முக்கிய படிவங்களும் சிங்களத்திலேயே அனுப்பப்படுகின்றன.

—04 ஆம் பக்கம் பார்க்க

## விமானம் கடத்தப்பட்டு

# எத்தியோப்பிய விமானப்படையினர் கிளர்ச்சியாளர்களினால் கைது

எத்தியோப்பியா தலைநகரை அண்டிய பல நகரங்களை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளதாகவும் அடிஸ் அபாபாவிற்குள் நுழைவதற்கான ஆயத்த நிலையில் அவர்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் பிரதான விமானதளம் ஒன்றும் கிளர்ச்சியாளர் வசம் வந்துள்ளதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்க சரக்கு விமானம் ஒன்றில் சென்ற இரு விமானப் —04 ஆம் பக்கம் பார்க்க

# காரைநகரில் உள்ளவர்களை மீட்க உறவினர்கள் முயற்சி

காரைநகரில் இராணுவத்தினரிடம் சிக்கியுள்ளவர்களை மீட்டுத்தருமாறு அவர்களின் உறவினர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கேட்டுள்ளனர்.

சிக்குண்டவர்களின் பெயர் மற்றும் விபரங்களை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஏற்கனவே உறவினர்கள் தெரிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் இதுவரையும் இவர்களை மீட்பதற்கு எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லையென சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது. ய-11

# வவுனியா பகுதி வயல்களில் மிருகங்களால் நெற்கதிர் அழிவு

வவுனியா பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் நூறு ஏக்கருக்கு மேற்பட்ட வயல்களில் அறுவடை செய்ய வேண்டிய — 04 ஆம் பக்கம் பார்க்க

# ராஜீவ்காந்தியின் கிரகநிலைபற்றி காஞ்சிப்பெரியவர் எச்சரித்திருந்தார்

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தமிழகத்துக்கு வருவதற்கு நான்கு தினங்களுக்கு முன்னதாகவே அவருக்குக் கிரக நிலை சரியில்லை என காஞ்சிகாமகோடி பெரியவர் சங்கராச்சாரிய சுவாமிகள் எச்சரித்திருந்தார். கடந்த செவ்வாய்க்கிழமை ராஜீவ்காந்தி தேர்தல் பிரசாரத்துக்காக தமிழ்நாட்டுக்கு வருவதற்கு முன்னதாக 17ஆம் திகதி வெள்ளிக்கிழமையே சங்கராச்சாரிய சுவாமிகள் இதனைத் தெரிவித்துள்ளார்.

காஞ்சிகாமகோடி பெரியவரை முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தேர்தலுக்கு முன்னர் சந்தித்து அவரது ஆசியைப் பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

## சைக்கிள் ஓட்டுபவருக்கு நல்ல செய்தி

சைக்கிள் ஓட்டுவது இருதய உடற்பயிற்சி என்று சோவியத் இருதய மருத்துவ நிபுணர்கள். மிக கடினமான உடற்பயிற்சிகளால் கிடைக்கும் அத்தனை நன்மைகளையும் சீரான சைக்கிள்சவாரி மூலம் பெறமுடியும் என்று அவர்கள் கூறியுள்ளனர். சைக்கிள்சவாரி இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்துகிறது. இருதய நோய் ஏற்படும் அபாயத்தை குறைக்கிறது. பதட்டத்தையும் மன உளைச்சலையும் தணிக்கிறது. நல்ல தூக்கம் வர உதவுகிறது. தோலின் நிறத்தை மேம்படுத்துகிறது. வைரஸ்களையும் பக்டீரியாக்களையும் எதிர்த்துப் போராடுவதற்கு உடலில் எதிர்ப்புசக்தியை அதிகரிக்கிறது. மேற்கண்ட நன்மைகளைப் பெற வேண்டுமானால் தினமும் குறைந்த பட்சம் 20 நிமிடங்களாவது வாரத்துக்கு 3 முறையாவது சீராக சைக்கிள் சவாரி செய்ய வேண்டும்.

## வளைகுடாவில் இருந்து நாடு திரும்பியவர்க்கு உதவி

வளைகுடா யுத்தத்தினால் நாடு திரும்பிய இலங்கையருக்கு உதவியளிப்பதற்காக வெளிநாட்டுவேலைவாய்ப்புப் பிரிவினால் நியமிக்கப்பட்ட ஆலோசகர்களுக்கான பயிற்சி நெறி கொள்ளுப்பிட்டி இரசமோதய நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப் பயிற்சி நெறியில் நாடு திரும்பியோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு எவ்விதத்தில் ஆலோசனைகள் வழங்கப்படவேண்டும் என்பது தொடர்பான விதிமுறைக்கிணங்கியதும் நடைமுறை ரீதியானதுமான பயிற்சிகள் வழங்கப்படும். (38)

## பயிற்சி வகுப்புகள் ஒத்திவைப்பு

கடந்த 17 ஆம், 18 ஆம், 19 ஆம் திகதிகளில் வடமராட்சி கோட்டக்கல்வி அலுவலகப்பகுதி ஆரம்ப கல்வி ஆசிரியர்களுக்கு நடாத்தப்படவிருந்த பயிற்சி வகுப்புக்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பின்போடப்பட்டதாகவும். இப்பயிற்சிவகுப்புக்கள் நடைபெறுவது பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 51

## ஆசியாவிலிருந்து படை குறைக்க அமெரிக்கா நடவடிக்கை

ஆசியாவிலிருந்து அமெரிக்கப்படைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார்.

இருபத்தைந்து வீத படைக் குறைப்பு ஆசியாவில் முதற்கட்டமாக மேற்கொள்ளப்படுகிறது எனவும் அவர் கூறினார்.

இதன்படி தென்கொரியாவில் உள்ள 44000 துருப்புக்களில் 7000 பேரும், ஜப்பானில் உள்ள 50000 துருப்புக்களில் 5000 பேரும், பிலிப்பைன்ஸில் 15000 பேரில் 2000 பேருமாக விலக்கிக் கொள்ளப்படவுள்ளனர்.

இது தொடர்பாக மேற்கூறிய நாடுகளுடன் பேச்சுவார்த்தைகளும் நடாத்தப்பட்டன. (38)

## நிர்வாக அங்கத்தினர் தெரிவு

இன்று மாலை 4 30 மணியளவில் நவாலி வடக்கு சன சமூக நிலையத்தின் 1991 ஆம் ஆண்டுக்கான நடப்பு வருட நிர்வாக அங்கத்தினர் புதிய தெரிவு நடைபெறும்.

இப் பொதுக் கூட்டத்தில் புதிதாகச் சேர விரும்பும் அங்கத்தவர்கள் மற்றும் பழைய அங்கத்தவர்களைத் தவறாது சமூகம் தரும்படி நிர்வாகம் கேட்டுள்ளது. (ப-11)

## குறைந்த செலவில் நிறைந்த பயன் தரும் காளான்

சாதாரணமாக ஒவ்வொரு வீடுகளிலும் ஒவ்வொருவருமே இலகுவாகச் செய்து கொள்ளக்கூடிய முறைதான் காளான் வளர்ப்பாகும்.

இதற்றை வளர்ப்பதற்கு வைக்கோல் அல்லது கழிவுக் கடுதாசி உபயோகிக்கப்படும். வைக்கோலை அண்ணளவாக இரு அங்குலத் துண்டுகளாக (2") வெட்டி நாலு தொடக்கம் ஆறு மணித்தியாலம் (4-6) நீரில் ஊறவைக்க வேண்டும். பின் 30 நிமிடம் கொதிநீரில் அவித்து அவற்றை வடித்து சாக்கின் மேல் பரவி உலரவிடவேண்டும். வைக்கோல் அதிகம் ஈரம் இல்லாமலும் காய்ந்து விடாமலும் இருப்பது விரும்பத்தக்கது.

இதை வளர்ப்பதற்கு கொள்கலனாக பேசின்கள், கேக் தட்டுக்கள், மரப்பெட்டிகள் (உயரம் குறைந்த அண்ணளவாக ஒரு அடி) போன்றவற்றில் ஏதாவது ஒன்றை உபயோகிக்கலாம்.

முறை I

ஒரு காளான் வித்து பக்கெற்றை மூன்று பாகமாகப் பிரிக்க வேண்டும். பின் தெரிவு செய்யப்பட்ட காளான் வளர்ப்புப் பாத்திரத்தில் 2 செ. மீற்றருக்கு வைக்கோலைப் பரவி ஒருபங்கு வித்தை தூவவேண்டும். பின் 5 செ மீற்றர் உயரத்திற்கு வைக்கோலைப் பரப்பி ஒரு பங்கு வித்தை தூவவேண்டும் பின் 5 செ மீற்றர் உயரத்திற்கு வைக்கோலைப் பரவி மூன்றாவது பங்கு வித்தை தூவ வேண்டும் பின் ஒரு பொலித்தீன் உறையினால் பாத்திரத்தின் மேற்புற வாசலை கட்டிவிடவேண்டும்.

இப்பாத்திரத்தை வீட்டின் உள ஒரு மூலையில் சுமார் 20 நாட்களுக்கு வைத்தல் வேண்டும். 21 ஆம் நாள் ஈரலிப்பான இடத்தில் வைக்க வேண்டும். இல்லையேல் ஈரச்சாக்கால் மூடிக்கட்ட வேண்டும். காலையும், மாலையும் நீர் தெளிக்க வேண்டும். காளான் வித்திட்ட நாளில் இருந்து 22-30 நாட்கள் வரை காளானைப் பெறமுடியும்.

(காளான் வித்து ஒரு பக்கெற்றின் விலை 10/- தமிழீழ ஆய்வு நிறுவன காளான் தேனீ வளர்ப்புப் பகுதியினரிடம் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விளக்கத்தையும் பெற்றுக் கொள்ளலாம்)

- தமிழீழ ஆய்வு நிறுவனம்

## நடராஜர் சிலை மீண்டும் தமிழகத்துக்கு

லண்டன் நீதிமன்றத்தினால் பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்ரீ நடராஜர் சிலை இன்னும் சில தினங்களில் தமிழகம் கொண்டுவரப்படவுள்ளது.

தமிழகத்திலுள்ள ஆலயமொன்றில் இருந்த இச்சிலை 976 இல் களவாடப்பட்டு லண்டனுக்குக் கடத்திச் செல்லப்பட்டு அங்குள்ள கன்னை நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

ஆலய நிருவாகிகளின் புகாரையடுத்து கொம்லண்ட்யாட் பொலிஸார் 1982 இல் இச்சிலையை குறித்த கன்னை நிறுவனத்திடமிருந்து மீட்டு லண்டன் நீதிமன்றிடம் ஒப்படைத்திருந்தனர்.

கடந்த ஒன்பது ஆண்டுகளாக இடம்பெற்ற விசாரணையின் பின்னர் ஸ்ரீநடராஜர் சிலையை மீண்டும் தமிழகஆலயத்துக்குத் திருப்பி ஒப்படைக்கும்படி லண்டன் நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பு வழங்கியிருந்தது.

## பெனாஸிர்பூட்டோவழக்கில் பிரான்ஸ் சட்டத்தரணிகள்

முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் திருமதி பெனாஸிர் பூட்டோ, அவரது கணவன் ஆஸிப் சர்தாரி ஆகியோருக்கு எதிராக நடைபெறும் நீதிமன்ற விசாரணைகளைக் கவனிக்க சர்வதேச மனித உரிமைகளுக்கான சம்மேளனம் இரு பிரான்ஸ் சட்டத்தரணிகளை அனுப்பியுள்ளது.

இவர்கள் இருவர் மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிக்க பாகிஸ்தான் ஜனாதிபதி இஷாக் விசேட நீதிமன்றம் ஒன்றை நியமித்திருந்தார்.

திருமதி பெனாஸிர் பூட்டோ பதவி நீக்கம் செய்யப்பட்டு அவரது அமைச்சரவையும் கலைக்கப்பட்டது தெரிந்ததே. (38)

## கிறீன் பீல்ட் சனசமூக அணி வெற்றியீட்டியது

யாழ் மாநகர சன சமூக நிலையங்களின் சமாசம் நடத்தும் மென் பந்து கிரிக்கெட் போட்டித் தொடரின் நேற்று முன்தினம் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் கிறீன் பீல்ட் ச.ச. நிலைய அணி, ஆரிய குளம் ஸ்ரார் அணியை 35 ஓட்டங்களால் தோற்கடித்தது.

நடுவர்களாக எம் கிறிஸ்கப்கின் டி ஏ எம் குணசிங்கம் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

இதுவரை நடந்து முடிந்த போட்டிகளில் வெற்றிபெற்ற, அரியாலை, குருநகர், நல்லூர் தெற்கு, கண்டிக்குளி எழிலூர், திருமகள், சென்மேரிஸ், புதுமைமாதா, கலைச்சுடர், பாரதி, கிறீன் கலைமகள், கொழும்புத்துறை திருவள்ளுவர் சனசமூக நிலையங்கள் இரண்டாவது சுற்றில் ஆடத் தகுதிபெற்றுள்ளன. (16)

## வாழை நாரில் உற்பத்தி

யாழ் மகளிர் அபிவிருத்தி நிலைய கொய்யாத்தோட்ட மகளிர் இணைப்புக் குழுவினரால் நடாத்தப்பட்ட வாழைநார் பயிற்சியில் முப்பது பெண்கள் பயிற்சி பெற்று வெளியேறினார்கள்.

இவர்களால் உற்பத்தி செய்த பொருட்களின் பொருட்காட்சி கடந்த சனிக்கிழமை கொய்யாத்தோட்டத்தில் நடைபெற்றது.

இதற் பிரதம விருந்தினராக மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். (38)

## முல்லைத் தபால்கள் வந்தன

வவுனியாவில் இரண்டு மாதங்களுக்கு மேலாக தேங்கியிருந்த முல்லை மாவட்டத்துக்கான வெளியூர் தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இத்தபால் பொதிகள் யாவும் தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப் பட்டுள்ளதாக முல்லை மாவட்ட தபால் அத்தியட்சகர் க. பரராசசிங்கம் தெரிவித்துள்ளார். (38)


இந்துசமய கலாசார அலுவல்கள்
இராஜாங்க அமைச்சரின் அலுவலகம்

## தமிழ் நூல்களுக்குப் பரிசளித்தல்

1. 1990 ஜனவரி 1ஆம் திகதி தொடக்கம் 1990 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வெளிவந்த கீழ்க்கண்ட துறைசார்ந்த நூல்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்

| | |
|---|---|
| 1. நாவல் | 2. சிறுகதை |
| 3. நாடகம் | 4. கவிதை |
| 5. இலக்கியத்திறனாய்வு | 6. சிறுவர் இலக்கியம் |
| 7. சமூகவியலும் மனிதப்பண்பியலும் | 8. அறிவியல் |
| | 9. ஏனையவை |

2. நூல் எழுதியவர் இலங்கையராயிருப்பதோடு நூலும் இலங்கையில் அச்சிடப் பட்டதாகவிருத்தல் வேண்டும்.

3. இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சரின் அலுவலகச் செயலாளர் நியமிக்கும் மதிப்பீட்டாளரின் மதிப்பீடுகளுக்கும், எடுத்துரைகளுக்கும் அமைய பரிசில்கள் வழங்கப்படும் செயலாளரின் முடிவே இறுதியும் முடிவானதுமாகும்.

4. மேற்குறித்த காலத்தில் இலங்கையில் தமிழ் நூல்களை எழுதி வெளியிட்ட நூலாசிரியர்களோ, வெளியீட்டாளர்களோ ஒவ்வொரு நூலிலும் ஐந்து பிரதிகளை கீழ்க்காணும் முகவரிக்கு தபாலிலோ நேரடியாகவோ 15 08 91க்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
"றக்ஷண மந்திரய" (9வது மாடி),
21, வொக்ஷோல் வீதி,
கொழும்பு - 02.

5. நூல்களை அனுப்பும் உறையில் இடதுபுற மூலையில் "தமிழ் நூற் பரிசுத் தேர்வு" என்ற வாசகம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

6. 1992 ஆம் வருடம் நடாத்தப்படவுள்ள தமிழ் இலக்கிய விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

க. சண்முகலிங்கம்
பணிப்பாளர்,
இந்துசமய, கலாசார அலுவல்கள்
திணைக்களம்.

கொழும்பு - 2,
11. 05. 1991.

05120

எதிர்பாராத விதமாக அரசியலுக்கு வந்து, ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ராஜீவின் அரசியல் வாழ்வு எப்படி அமைந்தது. இக்கட்டுரை ஆராய்கிறது.

# ராஜீவின் அரசியல் வாழ்வு

இந்தியாவின் அடுத்த பிரதமராக வரும் நம்பிக்கையுடனிருந்த ராஜீவ்காந்தி கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார்.

சென்ற வருடம் ஆனி மாதம் ராஜீவ்காந்தி காஞ்சிப் பெரியவரைச் சந்தித்து ஆசி பெற்றார். அப்போது அ.தி.மு.க எம்.பி. பன்னீர்செல்வம் "அன்னை இந்திராவும் பதவியில் இல்லாதபோது காஞ்சிப் பெரியவரிடம் ஆசி பெற்றார். மீண்டும் பிரதமராக வந்தார்- அதேபோன்று ராஜீவும் ஆசி பெற்றுள்ளார். அடுத்த பிரதமர் ராஜீவ்தான்" என்றார். அந்த வார்த்தைகள் ராஜீவுக்கு மேலும் நம்பிக்கையூட்டின. அடுத்த பிரதமர் நான்தானென உறுதியாக நம்பினார்.

## திடீர்ப் பொதுத்தேர்தல்

அந்த நம்பிக்கை அவருக்கு அசாத்தியத் துணிச்சலைக் கொடுத்தது. அந்தத் துணிவே திடீர்ப் பொதுத் தேர்தல் ஒன்றை உருவாக்க அவருக்கு உந்து சக்தியாக இருந்திருக்க வேண்டும்.

இந்தத் தேர்தல் நடப்பதற்கு ராஜீவ் காந்தியே காரண கர்த்தாவாக அமைந்தார்.

வி.பி. சிங் ராஜினாமாச் செய்ததும் சந்திரசேகரைப் பிரதமராக்கினார். பின்பு சந்திரசேகர் ஆட்சிசெய்ய முடியாத நிலையைத் தோற்றுவித்தார். அதன் விளைவே இந்தப் பொதுத் தேர்தல்.

## வன்முறையுடன் தேர்தல்

தேர்தல் வன்முறையுடனேயே ஆரம்பமாகியது. வன்முறையில் 45 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர் 500 வாக்குச் சாவடிகள் வன்முறைக் கும்பல்களினால் கைப்பற்றப்பட்டன.

இவையெல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல அமைந்தது ராஜீவின் கொலை.

ராஜீவ் காந்தி அரசியலுக்கு வருவதற்குக் காரணமாக அமைந்தது கூட ஒரு மரணம் தான். அவரது சகோதரர் சஞ்சய் காந்தி 1980 இல் விமான விபத்தில் காலமானதை அடுத்து தாயார் இந்திராவின் வற்புறுத்தலின் பேரில் "பைலட்" பதவியைத் துறந்து அரசியலில் புகுந்தார்.

இந்திராகாந்தியின் அகால மரணம்(1984) இவரை ஆட்சிப் பொறுப்பை ஏற்க வைத்தது. "ஒரு விமான ஓட்டிக்கு என்ன அரசியல்தெரியும்? அவரால் நாட்டைச் சரியாக நிர்வகிக்க முடியுமா?" என்ற கேள்விகள் எங்கும் எழுந்தன.

ஆனால் அவரோ பதவியேற்ற ஆரம்பத்தில் சுறுசுறுப்பாகவே இயங்கினார். பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டுமென்ற ஆர்வமிருந்தது.

நாகலாந்து, பஞ்சாப், அஸாம் ஆகிய மாநிலங்களின் நிலவிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அக்கறை செலுத்தினார். நாகலாந்திலும், அஸாமிலும் ராஜீவின் முயற்சியால் வன்முறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அவருக்கு ஒரு 'இமேஜ்' உருவாகியது. இது அவரது செயற்பாடுகளின் காரணமாக அல்ல, நேருவின் பேரன், இந்திரா காந்தியின் மகன் என்ற காரணத்தாலேயே அவருக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இந்தச் செல்வாக்குப் பெருகியது.

இந்தச் செல்வாக்கு அவருக்குத் துணிச்சலைக் கொடுத்தது. அவரைச் சுற்றி ஒரு கும்பல் கூடியது. யார் நல்லவர், யார் கெட்டவர் என்று உணர முடியாத நிலையில் இருந்தார். அரசியல் அனுபவம் இல்லாதது இதற்குக் காரணம் எனலாம்.

வெளியுறவு அமைச்சில் இருந்த மூத்த அனுபவசாலியான பார்த்தசாரதி, வெங்கடேஸ்வரன் போன்றோர் வெளியேற வேண்டிய சூழ்நிலை உருவாக்கினார்.

## இலங்கை விடயத்தில் தெளிவில்லை.

இதனால் பல்வேறு விடயங்களில் இவர் சரியான தீர்மானம் எடுக்க முடியவில்லை. வெளியுறவு அமைச்சிலிருந்து பார்த்தசாரதி, வெங்கடேஸ்வரன் போன்றோர் வெளியேற்றப்பட்டதால் ராஜீவுக்கு இலங்கை விடயத்தில் தெளிவான ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. மற்றவர்களால் அவர் தவறாக வழி நடத்தப்பட்டார்.

## தமிழர் விரும்புவது தமிழ் ஈழம்

ராஜீவ் காந்தியும், வெளியுறவு அமைச்சும் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஒரு குழப்பநிலை தோன்றியது. இதுபற்றி இணைப்பதிவு தளபதி சர்தேஷ் பாண்டே சிறப்பாகக் குறிப்பிடுகிறார். "புலிகளை அழித்து விட்டு இந்திய அமைதி காக்கும் படை அமைதிப் படையைப் புலிகளுக்கு எதிராகப் போரிடும்படி பணித்தது. அவர்கள் புலிகளை அழித்திடலாம் என்றே கருதியதாக இருந்தார்கள். ராஜீவோ, வெளியுறவு அமைச்சோ தமிழ் மக்களின் அபிலாஷைகளைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. தமிழர்கள் விரும்புவது தமிழ் ஈழம் என்பதை ராஜீவும் உணரவில்லை, வெளியுறவு அமைச்சும் உணரவில்லை" என்று கூறுகிறார் பாண்டே.

## மாபெரும் தவறு

ராஜீவ் தான் விரும்பியதை ஏற்கமறுத்த விடுதலைப்புலிகளை வழிநடத்தினார். அவர்கள் ஏற்றுக் கொள்ளும் போது போர் தொடுத்தார். அவரது அரசியல் வாழ்வில் அவர் எடுத்த மாபெரும் தவறான தீர்மானம் இது.

இந்தத் தவறான தீர்மானத்தினால் பல ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர் இறந்தனர். பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழர் பிரச்சினை மேலும் சிக்கலடைந்தது.

ராஜீவ் அன்று சரியான தீர்மானம் எடுத்திருப்பின் இன்று இந்த நிலை தோன்றியிருக்காது.

— வி. பி.

# "தன்மானத்துக்காகப் போரிட்ட தமிழர் பரம்பரை நாம்" - வாஞ்சிநாதன்

"தமிழனின் பெருமைகளில் ஒன்று அவனது தன்மானம். தன்மானத்துக்காகவே சேர, சோழ, பாண்டியர்களுக்கிடையில் எண்ணிலடங்காப் போர்கள் நடைபெற்றுள்ளன. தன் பரம்பரைக்குள் ஏற்படும் தன்மானப் பிரச்சினையைத் தாங்க முடியாமல் போரிட்டு வீரவரலாறு படைத்த தமிழன், எங்கிருந்தோ வந்த விஜயனின் பரம்பரையினர் எம்மைஅழிக்கும்போது எப்படித்தாங்கிக் கொண்டிருப்பான்.

இவ்வாறு அண்மையில் மணியந்தோட்டம் ஏழாம் குறுக்குத் தெருவில் நடைபெற்ற, மக்கள் உறவு, கொள்கை முன்னெடுப்புப் பொதுக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசும் போது-

காலம் இனிக் காத்திருக்காது! இதுவே போராட வேண்டிய நேரம்.. எதிரியின் எல்லைக்குள் சென்று அவனை விரட்டியடிக்க வேண்டும். . அதற்குத் தேவை வீரமும், தியாகமும் நிறைந்த உள்ளங்கள்...

நாம் பேடிகளைப் போல் கோடி கோடியாகப் பணத்தைத்தேடி, வெளிநாடுகளை நாடி ஓடிப்போய் அடிமை வாழ்வு வாழ்வதைவிட எதிரனை கஷ்டம் ஏற்பட்டாலும் இந்த மண் எமக்களின் சொந்தமண் என்ற உரிமையுடன், எமது தலைவர் திரு. பிரபாகரனின் தலைமையை ஏற்று. நமது தமிழ்மக்களை மீட்க முன்வரவேண்டும். அப்போது வரலாறு நம்மை வாழ்த்தும்.. இந்த வரலாற்றுக் கட்டத்திலிருந்து எந்தத் தமிழன் ஒதுங்கி ஒளிகின்றானோ அந்தத் தமிழனை எமது எதிர்காலச் சமுதாயம் ஒருபோதும் மன்னிக்காது." என்றார்.

# கைதடி முதியோர் இல்லத்தில் செவ்வாய் இசை நிகழ்ச்சி

நல்லூர் ஒய்வூதியர் சங்கத்தினரால் நாளை செவ்வாய்க்கிழமை கைதடி அரசினர் முதியோர் இல்லத்தில் இசை நிகழ்ச்சி நடாத்தப்படவுள்ளது.

ஒய்வூதியர் சங்கத்தின் முதியோர் சேவைத் தொடரில் அன்றையதினம் அங்குள்ள வயோதிபர்கள், ஆண்கள், பெண்களுக்கு தேவையான வைகள், மூக்குக் கண்ணாடிகள், உடுபுடவைகள், புத்தகங்கள், மூக்குச்சவரக்கத்திகள் போன்றவைகள் வழங்குவதற்கும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் பி. எஸ். திருச்செல்வம் தெரிவித்தார்.

அன்றைய சிறப்பு நிகழ்ச்சியாக திலகர் குணரத்தினத்தின் புல்லாங்குழல் கச்சேரியும் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட மதிக நீதிபதி எஸ். சோமசிகாமணி, யாழ் செயலக பிரதம கணக்காளர் எஸ். இலபாலன் ஆகியோர் கலந்து கொள்ள விருக்கின்றனர். 33

# ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலைய 45 வது ஆண்டு நிறைவு விழா

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தின் 45 வது ஆண்டு நிறைவு விழாவும், இல்ல மெய்வல்லுனர்ப் போட்டிகளும் இன்றும், நாளையும் நடைபெறவிருக்கின்றன.

இன்றைய தினம் சிறுவர்களுக்கான விநோத உடை, அஞ்சல் ஓட்டம் ஆகிய போட்டிகளும் நடாத்தப்படவிருக்கின்றன. மாவீரர் நினைவாக வட்டமாகாண ரீதியிலான 05 மைல் மரதன் ஓட்டப்போட்டி 28 ஆம் திகதி காலை 6 00 மணிக்கு நடைபெறவிருக்கிறது. மரதன் ஒட்டப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புவர்கள் நிலைய விளையாட்டுச் செயலாளருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இரவு நடைபெற இருக்கும் கலை நிகழ்ச்சிகளில் 8.00 மணிக்கு "இந்தமண் எங்களின் சொந்தமண்" புகழ் சாந்தனின் புரட்சிகானங்கள் இசை நிகழ்ச்சியும் இடம் பெறவிருக்கின்றது. (47)

# மதுவினால் வரும் கேடுகள்

கள், சாராயம், விஸ்கி, பிறண்டி, கசிப்பு இவை யெல்லாம் உடலைக் கெடுக்கும் நஞ்சுகள்.

பண்பாடு மிக்க நிலையில் சமூகம் மதுவை அடிமை கொள்கிறது, பண்பாடு சீரழியும்போது மது மனிதனை அடிமை கொண்டு குடியைக் கெடுக்கிறது. பொருளாதாரச் சீர்கேடு, ஒழுக்கக் கேடு என்பவற்றுக்கு வழி வகுக்கும் மது இறுதியில் உயிரையே குடிக்கும் நோய்களுக்குக் காரணமாகி விடுகிறது.

மதுப் பழக்கத்தோடு பல நோய்கள் தொடர்புடையவையாக உள்ளன. அவற்றைக் குணமாக்குவது மருத்துவர்க்கு அரைகூவலாக அமைந்து விடுகிறது. உயர் குருதி அமுத்தம், நினைவு இழப்பு, ஈரல் நோய்கள், தசைச் சோர்வு, சதைய அழற்சி, நுரையீரல் தொற்று, ஆண்மையிழப்பு, குடற்புண் என்பன மது அருந்தலால் ஏற்படும் சில விளைவுகளாகும். ஆளுமை மாற்றம், உடல் பருத்தல், உடல் ஒத்திசைவு இழப்பு என்பன குடிப் பழக்கத்தின் பிற விளைவுகள்.

மது அருந்துவதால் மூர்க்கத்தனம் உண்டாகிறது. பல வன்செயல்களுக்கு மதுவே தாயாக உள்ளது.

மதுப் பழக்கத்தைப் படிப்படியாகக் குறைத்து முற்றாக விட்டு விட்டால் ஒளிமயமான எதிர்காலம் உங்களை வரவேற்கும்.

# குழந்தைப் போஷாக்கில் கவனம் வேண்டும்

'மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடும் கட்டுப்பாடும் இருக்கும் இக்காலத்தில் குடும்பப்பெண்கள் சுற்றுப்புறம் பராமரிப்பு, சுகாதாரம் குழந்தைப்போஷாக்கு ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும். வெளிநாட்டில் இருந்து பொருள்கள் வரவில்லையே என்ற ஏக்கக் கவலையினாலேயே நாம் நோயாளராக வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இவ்வாறு யாழ் மகளிர் அபிவிருத்தி நிலையம் பெண்களின் சமூகம் என்ற தலைப்பில் நடத்திய கருத்தரங்கில் டாக்டர் திருமதி நிரஞ்சனி சிவபாலன் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

இக் கருத்தரங்கு மகளிர் அபிவிருத்தி நிலைய இயக்குநர் திருமதி சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் ஜனசக்தி வெளிக்கள அலுவலர் திருமதி புனிதம் சோமசுந்தரம் சண்டிக்குழி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி அம்பிகை மன்னிமுருகதாஸ் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர். (33)

## துர்நாற்றம்

கொடிகாமம்- பருத்தித்துறை வீதியில் முள்ளி என்ற இடத்தில் கடந்த சில நாட்களாகத் துர்நாற்றம் வீசுகிறது. இறைச்சிக்காக வெட்டப்பட்ட கால்நடைகளின் எலும்புகள் இப்பகுதியில் கொட்டப்படுவதாலேயே இவ்வாறு துர்நாற்றம் வீசுகிறது. (ப-86)

# ஹிஸ்புல்லாஹ் எம். பீ. பேச பாராளுமன்றத்தில் அனுமதியில்லை

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் எம். பி யான எம். எல். ஏ. எம் ஹிஸ்புல்லாஹ் பாராளுமன்றத்தில் பேசுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் சபாநாயகருக்கு கடித மூலம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸுக்கு ஒதுக்கப்படும் நேரத்தில் ஹிஸ்புல்லாஹ் பேச அனுமதி வழங்கப்படாது எனவும் அவர் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஹிஸ்புல்லாஹ் எம் பிக்கும் முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீதிமன்றம் வரை சென்றுள்ளது தெரிந்ததே. 33

# பண்டிதர் வகுப்பு மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம் நாவலர் மகாவித்தியாலயத்தில் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில்நடைபெற்று, க. பொ. த. உயர்தரப் பரீட்சை காரணமாக இடை நிறுத்தப்பட்டிருந்த பாலபண்டிதர், பண்டிதர் வகுப்புக்கள் மீண்டும் எதிர்வரும் யூன் 1 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகின்றன.

இந்து கலாசார அமைச்சு ஏற்பாடு

# 1990 ஆம் ஆண்டு வெளியான தமிழ் நூல்களுக்கு பரிசில்கள்

1990 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப் பகுதியில் வெளிவந்த சிறந்த தமிழ் நூல்களுக்கு இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சு பரிசில்கள் வழங்க உள்ளது.

நாடகம், சிறுகதை, கவிதை, நாவல், இலக்கியத்திறனாய்வு, சிறுவர் இலக்கியம், சமூகவியலும் மனிதப் பண்பியலும், அறிவியல், மற்றும் ஏனைய துறைகளைச் சார்ந்த நூல்களுக்கே இந்தப் பரிசில்கள் கிடைக்கவுள்ளன.

நூல் எழுதியவர் இலங்கையராக இருப்பதுடன் அந்த நூலும் இலங்கையில் அச்சிடப்பட்டிருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நூல்களை வெளியிட்ட நூல் ஆசிரியர்கள் அல்லது வெளியீட்டாளர் ஒவ்வொரு நூலிலும் ஐந்து பிரதிகளை தமக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பிவைக்குமாறு இந்து கலாசார அமைச்சு பணிப்பாளர் அறிவித்துள்ளார். 33

# கொழும்பு மாநகர சபைக்கு கணேசலிங்கம் மேயராவார்?

கொழும்பு மாநகர சபைக்கான மேயராக ஐக்கிய தேசியக்கட்சியின் பொருளாளர் கே. கணேசலிங்கமே தெரிவு செய்யப்படுவாரென கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த தேர்தலில் இவர் இரண்டாவது இடத்தை வாக்குகளின்படி பெற்றுக் கொண்டுள்ளார்.

இவரை மேயராக்குவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி மேல்மட்டத்தில் பலர் விரும்புவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 33

# இந்தியத்தலைவர்களுடன் பாகிஸ்தான் பிரதமர் சந்திப்பு

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் புதுடில்லியில் இந்தியப்பிரதமர் சந்திரசேகர் மற்றும் இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்.

முன்னாள் பிரதமர் ராஜீவின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக வந்த அவர் ஜனாதிபதி வெங்கட்ராமனையும் சந்தித்துப்பேசினார்.

இஸ்லாமாபாத் திரும்பிய அவர் செய்தியாளரிடம் பேசுகையில் இரு நாட்டுப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இந்தியத்தலைவர்கள் மத்தியில் ஆர்வம் இருப்பதாக குறிப்பிட்டார்.

காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டும் எனத் தாம் இந்தியத் தலைவர்களிடம் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

# முல்லை மாவட்ட தபால்கள் சைக்கிளில் எடுத்துவர ஏற்பாடு

முல்லைத்தீவு மாவட்டத் திருகோணமலை வெலிஓயா தபால்களை சைக்கிள்களில் தபால் ஊழியர்கள் மூலம் வவுனியாவுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோல வவுனியாவுக்கு ரயில் மூலம் வரும் இப்பகுதி தபால்களையும் இதே முறையில் கொண்டுவரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

வாரத்தில் ஒரு முறை இதனை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக் காலங்களில் தொண்டர் நிறுவன வாகனங்களிலும், ய. நோ. கூ. சங்க வாகனங்களிலுமே இத் தபால்கள் அனுப்பப்பட்டு வந்தன. இதனால் பல சிரமங்கள் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 33

## கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றினை சித்தன்கேணி கலைநகர் நேருஜி ச. ச. நிலைய விளையாட்டுக் கழகத்தினர் வெகுவிரைவில் கழகத்தலைவர் திரு. வி. வி. செல்வராஜா தலைமையில் நடாத்தவுள்ளனர்.

இச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் கழகச் செயலாளர் திரு. வே. கந்தசாமி ஜே. பி. யுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். 12

---

கற்றுநிருபங்கள்...

இதனால் சிங்கள மொழி பெயர்ப்பிற்காக சம்மந்தப்பட்ட திணைக்களங்கள் மொழி பெயர்ப்பாளரை தேடி அலைகின்றனர். ப11

---

வவுனியா—

நிலையில் உள்ள நெற்கதிர்கள் மிருகங்களினால் அழிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வயல்களில் யானை நடமாட்டம் இல்லாததால் மிருகங்கள் புகுந்து அழித்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மாதர்பணிக்கர் மகிழங்குளம், கோழியகுளம், வண்ணான்குளம், பூவரசங்குளம் போன்ற பகுதி வயல்களிலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. ப-11

---

கணக்கியல்...

விடைத்தாளை கேட்டபோது பேரேட்டு விடைத்தாள்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மாணவர்கள் சாதாரண விடைத்தாளில் பேரேடு, நாட்குறிப்பேடு என்பவற்றை தாமே தயாரிக்க வேண்டிய நிலையேற்பட்டதுடன் குறிப்பிட்ட நேரத்தில் விடையளிக்க முடியவில்லையெனவும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர். ப-11

---

இப்பத்திரிகை முரசொலி பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி "லக்ஷ்மி"பில்டிங்"இல் உள்ள அச்சகத்தில் 27. 05. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

● சர்வோதய இயக்கம்

# லேக்ஹவுஸ் பத்திரிகைகளுக்கு செய்தியாளர் மாநாட்டில் தடை

சர்வோதய இயக்கத் தலைவர் ஆரியரட்ன அண்மையில் கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடாத்தினார்.

இம் மாநாட்டில் லேக்ஹவுஸ் நிறுவன பத்திரிகைகளைத்தவிர ஏனைய பத்திரிகைகளின் நிருபர்கள் கலந்துகொண்டனர்.

லேக்ஹவுஸ் பத்திரிகைகள் சர்வோதயத்திற்கு எதிராக செய்திகள் வெளியிட்டதாலேயே லேக்ஹவுஸ் நிருபர்கள் மாநாட்டுக்கு அழைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. தமது நிருபர்கள் கேட்கும் கேள்விகளுக்கு ஆரியரட்ன தகுந்த பதில் அளிக்க முடியாததாலேயே தமது நிருபர்கள் இச் செய்தியாளர் மாநாட்டிற்கு அழைக்கப்படவில்லை என லேக்ஹவுஸ் பத்திரிகைகள் இம்மாநாடு குறித்து வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளன.

சர்வோதய இயக்கத்திற்கு வரும் வெளிநாட்டுப்பணம் மோசடி செய்யப்படுவதாக லேக்ஹவுஸ் பத்திரிகைகள் கட்டுரைகளையும், செய்திகளையும் வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. 33

# வவுனியாவில் கால்நடைகளுக்கு கால்வாய் நோய் பரவுகிறது

வவுனியாவின் பல பகுதிகளிலும் தற்போது கால்நடைகளுக்கு கால்வாய் நோய் பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நோயினால் கால்நடைகள் நீர் குடிக்க முடியாமலும், உணவு உண்ண முடியாமலும் இருந்து இறந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே கிளிநொச்சிப் பகுதியில் இந்த நோய் பரவி தற்போது ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக மிருக வைத்திய பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டில் வடமராட்சிப் பகுதியிலும் இந்நோய் காணப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் வட்டாரங்கள் கூறின. ப 6

# கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அங்குரார்ப்பணக் கூட்டம்

கோப்பாய் உதவிஅரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாஜம் அமைப்பதற்கான அங்குரார்ப்பணக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 10 மணிக்கு உதவி அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை சமுகந்தருமாறு கோப்பாய் உதவி அரச அதிபர் கேட்டுள்ளார். 33

## பயிற்சி நெறி

பொதுநலவாய நாடுகளின் இளைஞர் சேவை பரிசுவழங்கும் திட்டம் (1991) வடமராட்சி கருத்தெழுத்துக் கழகம் நடாத்தும் தமிழ் கருத்தெழுத்து - தட்டச்சுப் பயிற்சி நெறி வைபவரீதியாக இன்று காலை 9. 30 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

## ஷெல் தாக்குதல்

நேற்று முன்தினம் அதிகாலை காட்டுவன் இராணுவ முகாமில் இருந்து துப்பாக்கிச் சூடு, ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர் முகாமில் இருந்து எறிகுண்டுத்தாக்குதலும் நடாத்தப்பட்டது.

---

எத்தியோப்பிய...

படை அதிகாரிகள் உட்பட ஐம்பதுக்கு மேற்பட்ட எத்தியோப்பிய படையினர் விமானம்கடத்தப்பட்டதையடுத்து இளர்ச்சியாளரிடம் சிறைப்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகிறது.

---

கொழும்பு - யாழ்...

அனுமதி வழங்கப்படுமெனத் தெரியவருகிறது இங்கிருந்து செல்லும் கப்பலில் தபால் பொதிகளும் கடும் நோயாளிகளும் மட்டுமே செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வெறுமையாகச் செல்லும் இக் கப்பலில் பொருள்களை அனுப்ப எடுத்த முயற்சிகளும் பயனளிக்கவில்லையென கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. 33

---

ராஜீவ்...

சேர்த்தார். அவை பின்னர் இரண்டு வாகனங்கள் மூலம் தீமூர்த்தி பவனுக்கு எடுத்துவரப்பட்டது.

இன்று அஸ்திகலசங்கள் விசேட ரயில் வண்டி மூலம் அலகாபாத் கொண்டுசெல்லப்படுகின்றன. இவற்றுடன் திருமதி சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி மற்றும் உறவினர்கள், காங்கிரஸ் பிரமுகர்கள் ஆகியோரும் செல்கின்றனர்.

# கல்விச்சேவை தரம் மூன்று போட்டிப் பரீட்சை நடைபெறுமா?

இலங்கை கல்விச்சேவை தரம் மூன்றிற்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய திகதி இதுவரை நிர்ணயிக்கப்படவில்லை.

இப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட வேண்டும் என ஆசிரியர் தொழிற் சங்கங்கள் கல்வியமைச்சுக்கு கோரிக்கை விடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை இக்கோரிக்கை தொடர்பாக கல்வியமைச்சு எதுவித பதிலும் அறிவிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 12

கடந்த 16ஆம் திகதியே

# வி. பி. சிங்கும் -- ராஜீவும் கடைசியாக சந்தித்தனர்

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியும், முன்னாள் பிரதமர் வி. பி. சிங்கும் கடைசியாக இம்மாதம் 16ஆம் திகதி டில்லி விமானநிலையத்தில் சந்தித்துப் போயினர்.

தேர்தல் பிரசாரத்துக்காக வெளியூர் போவதற்காக இருவரும் விமான நிலையத்திற்கு வந்தபோதே சந்தித்தனராம்.

இருவரும் ஒருவரை ஒருவர் தழுவி கை குலுக்கி, எப்படி இருக்கிறீர்கள் பிரசாரம் எப்படி என்று அளவளாவினார்கள். 33

# இலங்கையின் பிரிட்டிஷ் தூதுவர் விரைவில் மாற்றப்படலாம்?

இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் கிளட்சன் விரைவில் மாற்றப்படலாம் எனக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சித் தேர்தல் முறைகேடாக நடைபெற்றதாகப் பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் கிளட்சன் கூறியிருப்பது, உள்நாட்டு விவகாரங்களில் அவர் தலையிடுவதாக இலங்கை அரசு குற்றஞ்சாட்டியிருந்தது.

இது தொடர்பான பேச்சு நடாத்த வெளியுறவு அமைச்சின் செயலாளர் பெர்னாட் திலகரட்ண லண்டன் சென்றுள்ளார்.

இதனையடுத்துப் பிரிட்டிஷ் தூதுவர் மாற்றப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

# தூதரக கட்டிட வேலைகளை இலங்கையர்களே மேற்கொள்வர்

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதுவராலய கட்டிட அமைப்பு, பராமரிப்புப் பணிகளை இனிமேல் இலங்கைப் பொறியியலாளர்களும் தொழில் நுட்பவியலாளர்களுமே மேற்கொள்ளவுள்ளனர்.

தற்பொழுது இப்பணிகளை தூதுவராலயங்கள் அமைந்துள்ள நாட்டவர்களே மேற்கொண்டு வருகின்றனர்.

இப்புதிய திட்டத்தினால், அரசு பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியை மீதப்படுத்தக் கூடியதாக இருக்குமாம்.

இதன் முதற்கட்டமாக லண்டனில் உள்ள இலங்கைத் தூதுவராலயம் திருத்தியமைக்கப்படவுள்ளது. அடுத்த மாதம் திருத்த வேலைகள் ஆரம்பமாகும்.

## உபஜனாதிபதி மறுப்பு

காங்கிரஸ் தலைமையை உப ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா ஏற்கலாம் என சில இந்திய பத்திரிகைகள் தெரிவித்திருந்தமையை அவர் நிராகரித்துள்ளார்.

இதே சமயம் காங்கிரஸ் எதிர்காலம் குறித்து ஆராய்வதற்காக புதன்கிழமை காங்கிரஸ் செயற்குழு கூடவுள்ளது.